திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, இந்த வினாவிற்கு விடை எழவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனக்கு பெர்சனல் எக்ஸ்பீரியன்ஸே இருக்கிறது. ஏற்கனவே 25 ஷேர்கள் எடுத்துவிட்டு, என்னுடைய தகப்பனாரே சுற்றிச் சுற்றி வந்தும் பணம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. எனக்கே இந்த நிலைமை இருப்பதால், சாதாரண ஏழைகளுக்கும் இந்த கஷடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படியில்லை என்றால் மனமார வரவேற்கிறோம். இன்னொன்று கேட்க விரும்புகிறேன். 9.8 ரெக்கவரி என்று....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி நீண்டதாக இருக்கக் கூடாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு 63·50 கொடுக்கப்படுவதாக சொல்கிறார்கள், அதை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா ? விலை வீழ்ச்சி அதிகமாக இருப்பதால் ஓரளவிற்கு வியாபாரிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலைக்கு கரும்பை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விலையைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் தர இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்த அனுபவத்தைப் பற்றிச் சொன்னார்கள். எம். ராஜு கவுண்டர் என்பவர் 1977-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதி அன்று 4,500 ரூபாய் கடன் வேண்டுமென்று மனு போட்டார். 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதி அன்று அது கூட்டுறவு பேங்குக்கு அனுப்பப்பட்டது. பணம் கிடைக்கவில்லை என்று 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ம் நாளில் மீண்டும் மனுச் செய்தார்கள். பரோடா பேங்கிலிருந்து கடன் அளிக்கப்பெற்றது. கூட்டுறவுத் துறையை விசாரித்ததில் அவர் இரண்டு சங்கங்களிலிருந்து கடன் பெறும் சூழ்நிலை இருந்ததால் இந்தக் காலதாமதம் ஏற்பட்டது என்று கூறியிருக்கிறார்கள்.

Nylon Industry in Andipatti Constituency.

*Q. No. 581—Thiru K. KANDASAMY ; Will the Hon. the Chief Minister be pleased to state :—

(a) whether there is any proposal to start a Nylon Industry near Vaigai Dam in Andipatti Constituency, Madurai district; and

(b) if so, the details thereof ?

1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1972-ம் ஆண்டு, மதுரை மாவட்டம், வைகை அணைக்கருகில் நைலான்—6 துணி நூலிழை தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை டிட்கோ நிறுவ உத்தேசித்திருந்தது. ஆயினும் இத்திட்டத்தை தொடங்குவதற்கு தேவையான அனுமதியை மத்திய அரசிடம் பெற முடியாததால் இதை செயல்படுத்த இயலவில்லை.

மின்சார உற்பத்தி மீது வரி.

*வினா எண் 582-திரு. என். பிட்டப்பா ; மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு யளிப்பாரா—

(அ) மின்சார உற்பத்தி மீது மத்திய அரசு அண்மையில் விதித்த (எக்சைஸ் லெவி) வரியை குறித்து முற்றிலும் மறு பரிசீலனை செய்திடக் கோரி மத்திய அரசிடம் நமது மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய மேல் நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஆயத் தீர்வை விதிப்பின் மூலமாக பெறும் தொகையை திரும்ப மாநில அரசுக்குக் கொடுப்பதாகவும் இம்முடிவு 1979-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து செயல்படும் எனவும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இது குறித்த முடிவு 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாளிலிருந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தி இவ்வரசு மத்திய அரசுடன் கடித தொடர்பு கொண்டுள்ளது.

சேத்தூரில் உப மின் நிலையம்.

*வினா எண் 583 திரு. இரா. தாமரைக் கணி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தூரில் 66 . K.V. உப மின் நிலையம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிந்து விட்டதா?

(ஆ) இல்லையெனில், தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; (அ) நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிந்துவிட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.